நலன்புரி நன்மைகள் சபை மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் அலுவலக வசதிக்காக கட்டிடத்தின் குத்தகைக்கான விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

பெறுகை நிறுவனத்தின் பெயர்	: நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
திட்டத்தின் பெயர்	: சமூக பாதுகாப்புத் திட்டம், நலன்புரி நன்மைகள் சபை
Credit No.	: 7363-LK
பெறுகை குறிப்பு இல.	: SPP/Proc/2026-03

1. சமூக பாதுகாப்புத் திட்டத்தின் செலவை நோக்கி சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்திடம் இருந்து இலங்கை சனநாயகக் சோசலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு பெறுகை குறிப்பு இல.: SPP/Proc/2026-03 நலன்புரி நன்மைகள் சபை மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் அலுவலக வசதிக்காக கட்டிடத்தின் குத்தகைக்கான ஒப்பந்தத்தின் கீழ் கொடுப்பனவுகளுக்கு இந்த கடனின் பகுதியையும் அத்துடன் அரச நிதியையும் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. நலன்புரி நன்மைகள் சபை மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் இடவசதிக்காக கட்டடத்தை குத்தகைக்கு பெறுவதற்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து நலன்புரி நன்மைகள் சபை, சமூக பாதுகாப்புத் திட்டத்தின் சார்பில் திட்டப் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

இடம்	: கொழும்பு 01 தொடக்கம் 12 வரை மற்றும் பத்தரமுல்லை வடக்கு மற்றும் மேற்கு
சதுர அடி	: 9100 - 9200 சதுரஅடி
காலம்	: ஐந்து (05) ஆண்டுகள்

3. திறந்த போட்டிரீதியான விலைமனு முறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
4. ஆர்வம் கொண்ட தகுதி பெற்ற விலைமனுதாரர்கள் 077-3914120 என்ற இலக்கத்தில் தொடர்புகொள்வதன் மூலம் நலன்புரி நன்மைகள் சபை, சமூக பாதுகாப்புத் திட்டத்தின் பெறுகை நிபுணரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2026.03.23 ஆம் திகதி வரை 9.00 மணி தொடக்கம் 16.00 மணிவரை கீழ் தரப்பட்ட முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
5. **தேவையான தகைமைகளில் உள்ளடங்குவன**
   I. விலைமனுதாரர் முன்மொழியப்பட்ட வளாகத்தின் சட்டப்பூர்வ உரிமையாளராகவோ அல்லது சட்டப்பூர்வ உரிமையாளரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாகவோ இருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக இருந்தால், உரிமையாளரிடமிருந்து செல்லுபடியாகும் அற்றோணித் தத்துவம் அல்லது எழுத்துப்பூர்வ அங்கீகாரத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
   II. குத்தகை ஏற்பாட்டைப் பாதிக்கக்கூடிய உரிமைத் தடைகள், பிரச்சினைகள் அல்லது சட்டப்பூர்வ உரிமைகோரல்கள் ஆகியவற்றிலிருந்து ஆதனம் விடுவிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
   III. விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியல் அல்லது எந்த ஒரு அரச நிறுவனம் அல்லது நிதி நிறுவனத்தினாலும் தடைசெய்யப்படாதவராக இருத்தல் வேண்டும்.
   IV. விலைமனுதாரர் வளாகத்தை குத்தகைக்கு எடுக்கும் திறனைப் பாதிக்கும் எந்தவொரு வழக்கிலும் ஈடுபடக்கூடாது.
   V. குத்தகை காலம் முழுவதும் வளாகத்தை நல்ல நிலையில் பராமரிக்க விலைமனுதாரர் நிதி திறனை நிரூபித்தல் வேண்டும். கடந்த மூன்று (03) ஆண்டுகளுக்கான வங்கி அறிக்கைகள், கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் அல்லது ஏனைய நிதி ஆவணங்கள் போன்ற சான்றுகள் தேவை.
   VI. முன்மொழியப்பட்ட வளாகம் அனைத்து பொருந்தக்கூடிய உள்ளூர் அதிகாரசபை விதிமுறைகள், கட்டிடக் குறியீடுகள், தீ பாதுகாப்பு விதிமுறைகள் மற்றும் சுற்றுச்சூழல் தேவைகளுக்கு இணங்குதல் வேண்டும். செல்லுபடியாகும் இணக்கச் சான்றிதழ்கள், கட்டிட ஒப்பந்தங்கள், தீ பாதுகாப்பு அனுமதி மற்றும் வேறு ஏதேனும் சட்டப்பூர்வ ஒப்புதல்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
   VII. முன்மொழியப்பட்ட கட்டிடம் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் பயன்பாட்டிற்குக் கிடைக்கும் தன்மை.
   VIII. விலைமனுதாரர் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் மூன்று (03) ஆண்டு காலத்திற்கு குத்தகை ஒப்பந்தத்திற்கு வர இணங்குதல் வேண்டும்.
   IX. விலைமனுதாரர் குத்தகை காலம் முழுவதும் கட்டமைப்பு கூறுகள் மற்றும் முக்கிய நிறுவல்கள் உட்பட வளாகத்தை பராமரிக்க ஒப்புக்கொள்ளல் வேண்டும்.

   மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ளன.
6. மீளளிக்கப்படாத கட்டணமாக முப்பத்து ஐயாயிரம் இலங்கை ரூபாவை (இ.ரூபா 35,000.00) செலுத்தி கீழுள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றைக் கொள்வனவு செய்யலாம். கட்டணத்தை சமூக பாதுகாப்புத் திட்டத்திற்கு ரொக்கப்பணத்தில் வைப்புச் செய்தல் வேண்டும்.
7. விலைமனுக்களை 2026.03.24 ஆம் திகதி 14.00 மணி அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2026.03.24 ஆம் திகதி 14.00 மணிக்கு கீழுள்ள திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் இலங்கை ரூபா ஐந்து இலட்சம் (இல. ரூபா: 500,000.00) "விலைமனுப் பிணை" ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
8. மேல் குறிப்பிடப்பட்ட முகவரியானது:

தலைவர்
திட்ட பெறுகைக் குழு
சமூக பாதுகாப்புத் திட்டம்
நலன்புரி நன்மைகள் சபை
ஜே.ஆர். ஜயவர்தன நிலையம்
இல. 191, நாரமல மாவத்தை
கொழும்பு 07.

மின்னஞ்சல் : ajanthagalhena5@gmail.com
தொடர்பு இல.: 077-3914120